# சுபீட்சம்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 04.04.2023 supeedsam.com supeedsam@gmail.com


# தேர்தல் எப்போது? இன்று முக்கிய தீர்மானம்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அடுத்த கட்ட தீர்மானங்கள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு செவ்வாய்க்கிழமை (4) மீண்டும் கூடி ஆராயவுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தலைமையில் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இம்மாதம் 25ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

எனினும் நிதி நெருக்கடியால் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாமையினால் குறித்த தினத்தில் திட்டமிட்டவாறு

02 ஆம் பக்கத்தில்...

## கருநாட்டுக்கேணி தமிழர் காணிகளில் சிங்களக் குடியேற்ற முயற்சி

### தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பு



முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசச்செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களில் ஒன்றான கருநாட்டுக்கேணியிலுள்ள தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து சிங்களக்குடியேற்றம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

குறிப்பாக கருநாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் நிலையத்தைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய காணிகளே, இவ்வாறு அபகரிக்கப்பட்டு சிங்கள குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் கீர்த்தி தென்னக்கோனின் வழிகாட்டலில், மகாவலி

02 ஆம் பக்கத்தில்...

## 14 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவர் விடுதலை!

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மூவர் 14 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வேலணையை சேர்ந்த இ. திருவருள், யாழ் கரவட்டியை சேர்ந்த ம. சுலக்சன், முள்ளியவளையை சேர்ந்த க. தர்சன் ஆகிய மூவருக்கும் எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

இருப்பினும் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூப்பிக்கப்படாத நிலையில், குறித்து மூவரையும் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் வவுனியா மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

## புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்கும் டியாகோ கார்சியா புகலிடக் கோரிக்கையாளர்கள்!

பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியப் பெருங்கடல் தீவான டியாகோ கார்சியாவில் தங்கியுள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள், புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் 68 புகலிடக் கோரிக்கையாளர்கள் அங்கு சென்று 18 மாதங்கள் கடந்துள்ள நிலையில் தங்களை அங்கிருந்து மூன்றாம் தரப்பு நாடுகளுக்காவது அனுப்புமாறு கோருகின்றனர்.

குறித்த தீவில் இதுவரை 68 தமிழ்

02 ஆம் பக்கத்தில்...



## மக்களை அடக்குவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஊடாக மக்களை அடக்குவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், கிளர்ச்சியாளர்கள் வெறியாட்டம் போட ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்பு வெளியிடப்படுவது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மகளின் பார்வைக்காக கையேந்தும் முன்னாள் போராளி

தமிழ் மக்களின் விடுதலைக்காக தனது 14 வயதில் ஆயுதம் ஏந்தி போராடி, தற்போது மாற்றுத்திறனாளியாகியுள்ள சிலுவைராசா என அழைக்கப்படும் தமிழ் கீதன், விடத்தல் தீவு பகுதியில் மிகுந்த வாழ்க்கை சவால்களுடன் வாழ்ந்துவருகின்றார்.

ஒழுங்காக நடக்க முடியாத நிலையிலும், தனது மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தை

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com

finma :34598 25605: cicero


## கிழக்கில் பிச்சை எடுத்த கொழும்பு ஐஆர்சி சிக்கினார்

பிச்சைக்கார வேடம் பூண்டு மட்டக்களப்பு நகரில் துவிச்சக்கரவண்டியை திருடிச் சென்றவர், வெள்ளிக்கிழமை (31) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் பல குற்றங்கள் புரிந்து குற்றவாளியான இவர், பொலிஸின் ஐஆர்சி பட்டியலில் உள்ள தெமட்டகொடையைச் சேர்ந்த ஒருவர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறிப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல
Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள உறுப்பினரை உருவாக்கவே மாதவனை மயிலந்தனை குடியேற்றம்!

## தந்தை செல்வா நினைவுரையில் கலையரசன் எம். பி. காட்டம்!

( வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள உறுப்பினர் ஒருவரை உருவாக்கவே மாதவனை மயிலந்தனை சிங்கள குடியேற்றம் திட்டமிட்டு அரங்கேறி வருகிறது. இதற்கு ஆளுநர் உரம் போடுகிறார்.

இவ்வாறு தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தினநினைவு நிகழ்வில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.





இந் நிகழ்வு திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் நந்தபாலு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது . காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலும் கலந்து சிறப்பித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்....

மட்டக்களப்பு மாவட்டத்தில் 76% தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே இதுவரை சிங்கள பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மாகாண சபை உறுப்பினரோ இல்லை. எதிர்காலத்தில் அங்கு சிங்கள உறுப்பினர் ஒருவரை உருவாக்குவதற்காகவே தமிழ் மக்களின் விவசாய பிரதேசமான மாதவனை மயிலந்தனையில் சிங்கள குடியேற்ற திட்டத்தை ஆளுநர் தொடக்கம் அரசாங்கம் வரை செய்து வருகிறது.

யுத்தம் மௌனித்து 14 வருடங்கள் முடிந்து விட்டது .ஆனால் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் எதனையுமே செய்து முடிக்கவில்லை.

இந் நிலையில் எங்கள் மீது பலர் விமர்சனம் செய்ய தொடங்கி இருக்கிறார்கள். நாங்கள் ஒருபோதும் வீதி போட்டுத் தருவோம் வீடு கட்டித் தருவோம் என்று வாக்கு கேட்டதில்லை. நாம் தந்தை செல்வா வழியிலே அஹிம்சை வழியில் உரிமைகளை பெற ஒற்றுமையாக அரசியல் பயணத்தில் பயணிக்கின்றோம். எமது தமிழ் மக்கள் சொந்தமண்ணிலே சுதந்திரத்துடன் வேண்டும் என்ற ரீதியிலே நாங்கள் அகிம்சை வழியில் போராடி வருகின்றோம்.

சிங்கள பேரினவாதம் ஜனநாயகம் என்ற போர்வையிலே அதனை திட்டமிட்டு நசுக்க சிங்களர்களை குடியேற்றுவதற்கு ஆளுநரைப் பயன்படுத்தி வருகின்றது. மாதவனை மயிலந்தனைபகுதியில் தமிழர்களுடைய காணியை அடாத்தாக பிடித்து சிங்களவர்களுக்கு கொடுப்பதற்கு காணி அளக்கப்பட்டு வருகின்றது. இன்று தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்ப்போம் என்று ஜனாதிபதி ரணில் முன்வந்திருக்கின்றார். உண்மையில் அவர் அப்படி செய்வாராக இருந்தால் இலங்கை அரசியல் அரங்கில் ஒரு பொருத்தமான நீதியான மாபெரும் தலைவர் ரணில் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

துரதிஷ்டவசமாக இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் நீண்ட காலமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள். அதன் காரணமாகவே தமிழ் மக்களால் யாரையும் நம்ப முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தந்தை செல்வா பல ஏமாற்றங்களை அன்று சந்தித்தார் .அவர் சிங்களத் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பிரகடனம் கூட பிற்காலத்தில் கிழித்து எறியப்பட்டது அல்லது அமுலாக்கப்படவில்லை. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்தது தமிழினம். இன்று யாரையும் நம்பத் தயாரில்லை என்ற நிலைக்கு வந்திருக்கின்றது. இனியும் ஏமாற முடியாது. எனவேதான் மிகவும் கவனமாக நிதானமாக பயணிக்கிறோம்.மக்களும் நிலையை உணர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்,

## பெண்மையை போற்றுவோம்!





(அபு அலா)

திருகோணமலை அன்பின் பாதை சமூகம் மற்றும் எண்ணம் போல் வாழ்க்கை இணைந்து நடாத்திய பெண்மையை போற்றுவோம் எனும் தொனிப் பொருளில் சர்வேதச மகளிர் தின நிகழ்வும், மகுடம் வழங்கும் ஸ்ரீ ரஞ்சனியின் (கனடா) ஒன்றே வேறே சிறுகதை நூல் வெளியீடும் (01) திருகோணமலை குளக்கோட்டம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலய அதிபர் (திருமதி) சுஜந்தினி யுவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிரிஸ்டியன் நோயல் இமானுவேல் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாயளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் (திருமதி) ஜெ.ஸ்ரீபதி, கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் (திருமதி) இந்திரமதி வேதநாயகம் மற்றும் சட்டத்தரணி (செல்வி) ஐஸ்வர்யா சிவகுமார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும், அன்பின் பாதை சமூகத்தின் நிறுவுனர் (திருமதி) றொஸில்டா அன்டன், எண்ணம் போல் வாழ்க்கை நிறுவனத்தின் தலைவர் கனக தீபகாந்தன், இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் த.து.ரகுராம் உள்ளிட்ட வைத்தியர்கள் என பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் இதயதீபம் முன்பள்ளி மாணவர்களினால் வரவேற்பு நடனமும், வைத்திய அதிகாரி வைத்தியர் அமிர்தகுலசிங்கம் சஞ்சயனால் நம்மவர் இசையும் இடம்பெற்றதுடன், திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல்துறையைச் சேர்ந்த 19 மண்ணின் மாதர்களுக்கு மதிப்பளித்து அவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னத்துடன் அவர்களைப் பற்றிய நூல் ஒன்றும் அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அன்பின் பாதை சமூகத்தின் நிறுவுனர் (திருமதி) றொஸில்டா அன்டனின் சமூக சேவைகளைப் பாராட்டி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாயளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரனினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும், மகுடம் வழங்கும் ஸ்ரீ ரஞ்சனியின் (கனடா) ஒன்றே வேறே சிறுகதை நூல் வெளியீட்டின் முதற்பிரதியை தம்பலகாமம் பிரதேச செயலாளர் (திருமதி) ஜெ.ஸ்ரீபதி பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மக்களை அடக்குவது

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு இம்மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவரைவு சபையில் முன்வைக்கப்படுவதற்கு முன்னரே அது பேராபத்து என்று எதிர்க்கட்சியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் துள்ளிக் குதிக்கின்றனர்.

முதலில் சட்டவரைவு முன்வைக்கப்பட்ட பின்னர் அதிலுள்ள பரிந்துரைகளைப் பார்க்கவேண்டும். அதன்பின்னர் விமர்சனங்களை முன்வைக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது சர்வாதிகார அரசு அல்ல. நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் தான் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு மிக முக்கியமானது. அதைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் செயற்பட எவருக்கும் அனுமதி இல்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்கும்

புகலிடக்கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 9 பெண்களும், 47 ஆண்களும், 17 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

அவர்கள் கனடா நோக்கி சென்ற போது அவர்களது படகு சேதமடைந்த நிலையில் பிரித்தானிய மற்றும் அமெரிக்க இராணுவ தளம் அமைந்துள்ள டியாகோ கார்சியாவில் தஞ்சமடைந்தனர்.

சில வாரங்களில் அவர்களை அங்கிருந்து அனுப்புவதாக தீவின் அதிகாரிகள் அறிவித்திருந்த போதிலும் அவர்களில் 68 பேர் 18 மாதங்களாக அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பான தகவல்களை முன்னதாக பல சந்தர்ப்பங்களில் எமது செய்தி சேவை வெளிப்படுத்தியிருந்தது.

அங்குள்ள பலர் தங்களது உயிரை மாய்த்துக்கொள்ள முயல்கின்ற சம்பவங்கள் தொடர்பிலும் எமது செய்தி சேவையில் வெளிப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், அங்குள்ள மேலும் 4 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களது உயிரை மாய்த்துக்கொள்ள முற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய தினம் 15 வயதுடைய சிறுமி ஒருவரும், கடந்த சனிக்கிழமை மூன்று ஆண்களும் உயிரை மாய்த்துக்கொள்ள முற்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.இந்தநிலையில், தங்களது பிள்ளைகள் 18 மாதங்களாக பல சிரமங்களை எதிர்கொள்வதாக அங்குள்ள தாய் ஒருவர் எமது செய்தி சேவையிடம் தெரிவித்தார்.

அதேநேரம், ஏதிலி நிலையின்றி சுதந்திரமாக வாழக்கூடிய நாடொன்றுக்கு தங்களை அனுப்புமாறும் தங்களது விடயத்தில் புலம்பெயர் அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

டியாகோ கார்சியா என்பது பிரிட்டிஷ் இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் 27 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்ட பிரதேசமாகும்.

இது மொரிஷியஸ் மற்றும் சீஷெல்ஸில் உள்ள பிரிட்டிஷ் குடியேற்றத்துடன் ஒன்றாக இணைக்கப்பட்ட பகுதியாகும்.

தீவின் பூர்வீக குடிகளாக சாகோசியன் மக்கள் வாழ்ந்தனர்.

எனினும் பிரிட்டிஷ்- அமெரிக்க இராணுவ தளம் அமைப்பதற்காக, 1960 மற்றும் 1970 களில் அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தர் நிர்வாக அதிகாரியாக பதவி உயர்வு!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை வெளியான முகாமைத்துவ உதவியாளர் சூப்பரா ரக பரீட்சையில் ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தர் தெரிவாகி இருக்கின்றார்.

காரைதீவு பிரதேச செயலகத்தின் நிதி உதவியாளராக பணியாற்றும் ஆர்.கணேசமூர்த்தி இவ்வாறு சூப்பரா பரீட்சையில் சித்தி அடைந்து நிர்வாக உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



காரைதீவைச் சேர்ந்த கணேசமூர்த்தி முன்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலக பதில் நிருவாக உத்தியோகத்தராக பல வருடங்கள் சேவையாற்றி வந்தார்.

அடுத்த வாரம் அவருக்கான புதிய பிரதேச செயலக ஸ்தானம் வழங்கப்பட இருக்கின்றது. பெரும்பாலும் திருக்கோவில் பிரதேச செயலகம் வழங்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் இப் பரீட்சையில் தெரிவான ஏனையோர் அனைவரும் சிங்கள முஸ்லிம் உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் பிச்சை எடுத்த கொழும்பு ஐஆர்சி சிக்கினார்

மட்டு பொதுச் சந்தை பகுதியில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளார் .

பாடசாலை மாணவன், நகரில் மத்திய வீதியிலுள்ள உணவு கடை ஒன்றின் முன்னால் துவிச்சக்கரவண்டியை மார்ச் 22ஆம் திகதி நிறுத்திவிட்டு கடைக்குள் சென்று திரும்பிய போது 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான துவிச்சக்கரவண்டி திருட்டு போயுள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டடையடுத்து பொலிஸார் அந்த பகுதி வீதியில் உள்ள கடைகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராக்கள் மூலம் திருடனை தேடிவந்தனர். அதிலிருந்த காட்சிகளின் அடிப்படையிலேயே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பில், ஏழு குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு, பொலிஸ் ஜஆர்சி பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர் எனவும் தெரியவருகின்றது,

இவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் சனிக்கிழமை(01) ஆஜர்படுத்திபோது எதிர் வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## மகனின் பார்வைக்காக கையேந்தும் முன்னாள் போராளி

பராமரிப்பதற்காக, தனக்கு கிடைக்கும் கூலி வேலைகளுக்கு சென்று வருகிறார். ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என அனைத்தும் இவரின் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கியுள்ளன.

இவரின் மனைவி தனியார் நிறுவனம் ஒன்றில் சிறிய சம்பளத்தில் சுத்திகரிப்பு பணியாளராக வேலை செய்கின்றார். தமிழ் கீதனின் மூத்த மகள் உயர்தரத்தில் கல்வி பயில்கின்றார். இரண்டாவது மகன், விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டு, எலும்பு முறிவு ஏற்பட்டு, அவரும் மாற்றுத்திறனாளியாக மாறியுள்ளார். அவரின் மூன்றாவது மகனும் பார்வை இல்லாத குழந்தையாகப் பிறந்துள்ளார். இவ்வாறு தானும் தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் மாற்றுத்திறனாளிகளாக இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாத நிலையில் தவித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தன்னிடம் இருந்த படகு மற்றும் இதர சொத்துகளை விற்று, மகனின் பார்வைக்காக பல சிகிச்சைகளை மேற்கொண்ட போதிலும் சிகிச்சைகள் பலன் தராத நிலையில், மேலதிக சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் வறுமையின் பிடியில் சிக்கி தவித்து வருகின்றார்.

தனக்கு ஆடம்பர உதவிகள் எதுவும் செய்யாவிட்டாலும் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவிக்கும் ஏதேனும் உதவிகளை புலம்பெயர் உறவுகள் வழங்க முன் வந்தால் தன்னுடைய குடும்பத்தையும் தன்னுடைய மகனின் சிகிச்சையையும் கொண்டு நடத்த உதவியாக இருக்கும் என கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்கீதன் (சிலுவைராசா) (077) 518 4741.

## கருநாட்டுக்கேணி தமிழர் காணிகளில்

அபிவிருத்தி அதிகாரசபையினாலேயே இந்த சிங்கள குடியேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் அவ்வாறு சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை பார்வையிடுவதற்கு, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், கரைதுறைப்பற்று பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் 03.04.2023 இன்று கருநாட்டுக்கேணிப் பகுதிக்கு வருகைதந்திருந்தனர். இந் நிலையில் குறித்த ஆக்கிரமிப்புச் செயற்பாட்டிற்கு முன்னாள் வடமாகாணசபை துரைராசா ரவிகரன் மற்றும், காணிகளுக்குரிய தமிழ் மக்கள் ஆகியோர் இணைந்து தமது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

கடந்த 1973, 1979ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்ட இக் காணிகளில் தாம் குடியிருந்ததுடன், பயிர்ச்செய்கைகளிலும் ஈடுபட்டு வந்ததாகவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

தமது பூர்வீகமான இக்காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு தாம் ஒருபோது இடமளிக்கமுடியாதெனவும் காணிகளுக்குரிய தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நீர்ப்பாசன வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயா பகுதி சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மக்களுக்குச்சொந்தமான மானாவாரி விவசாய நிலங்கள் பலவும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் தற்போது தமிழ் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அபகரிப்புச்செய்து அங்கு சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கை தமிழ் மக்களை மேலும் அதிர்ப்திக்குள்ளாக்குவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் எப்போது?

தேர்தலை நடத்துவது கடினம் என பின்னர் அறிவிக்கப்பட்டது.

அது மாத்திரமின்றி ஆரம்பத்திலேயே தேர்தலுக்கான தினத்தை தீர்மானிக்காது , தேர்தலை நடத்துவதற்கான வசதிகள் மற்றும் சூழல் தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இறுதியாக தினத்தை அறிவிப்பதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடந்த மார்ச் 23ஆம் திகதி ஆணைக்குழு அறிவித்தது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் கேள்வி எழுப்பப்பட்ட போது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்தன தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை அழைத்து பேசவுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறிருப்பினும் இதுவரையில் அவ்வாறு எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை.

எனினும் இவ்வாரம் பிரதமருடன் சந்திப்பு இடம்பெறக் கூடும் எனத் தெரிவித்துள்ள ஆணைக்குழு , உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாகவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையிலேயே செவ்வாய்க்கிழமை (4) தேர்தல் ஆணைக்குழுவில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

# ரணிலுடன் பேசி தமிழ் மக்களின் உரிமைகளை தேவைகளை பேற்றுத்தர வேண்டும்!

## தந்தை செல்வா நினைவுரையில் முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் கருத்து

(வி.ரி. சகாதேவராஜா)

நாம் அன்று தொடக்கம் இன்று வரைக்கும் ஆதரவளித்து வரும் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையைச் செய்து எமது உரிமைகளை மற்றும் தேவைகளை பெற்றுத் தரவேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கின்றார்கள். இதனை தமிழரசுக் கட்சி தலைமைத்துவங்கள் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு அம்பாறையில் இடம் பெற்ற தந்தை செல்வாவின் 125 வது பிறந்த நாள் நினைவு விழாவில் உரையாற்றிய இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திற்கான தந்தை செல்வா பிறந்த நினைவு தின நிகழ்வு திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் நந்தபாலு தலைமையில் நடைபெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில்

அவர் மேலும் பேசுகையில்...

அன்று தமிழர்களின் அடையாளத்தை பேணிப் பாதுகாப்பதிலே வேலுப்பிள்ளை மகன் தந்தை செல்வா அன்று பல தியாகங்களை அஹிம்சை வழியில் மேற்கொண்டார் .அந்த அஹிம்சை வழிப் போராட்டம் வெற்றி அடையாமல் போகவே மற்றும் ஒரு வேலுப்பிள்ளையின் மகன் பாரிய ஆயுத யுத்தத்தை உலகம் வியக்கும் வண்ணம் மேற்கொண்டார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எம்மின துரோகிகள் எதிரிகளினால் அந்தப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.



மாறி மாறி வந்த ஆட்சியாளர்களுடன் தந்தை செல்வா அன்று தனித்துவமாக பேசினார். வடக்கு கிழக்கு தமிழ் மண்ணிலே தமிழ் பேசும் மக்கள் தனித்துவமாக வாழ வேண்டும். உரிமையோடு வாழ வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டார். அனைத்தும் ஏமாற்றத்தை சந்தித்தன.

இறுதியில் தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வாஅன்று சொன்னார். அந்த நிலைமை தான் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கத்துடன் எதிர்த்துக் கொண்டு எமது தமிழ் மக்களின் நில வளங்களை பாதுகாத்தல் தொழில் வாய்ப்புகளை பெறுதல் போன்ற பல வேலைத்திட்டங்களை தமிழ் அரசியல் தலைமைகள் அவ்வப்போது செய்து வந்தார்கள். இருந்தாலும் அதற்குள் பத்து வீதமான சில புல்லுருவி தலைவர்கள் தமிழ் மக்கள் இரத்தத்தை உறிஞ்சி அதற்கு எதிராக செயல்பட்டார்கள்.

இன்று மட்டக்களப்பில் குறிப்பாக மாதவனை மயிலந்தனை வாகனேரி போன்ற நிலவளங்களை சூறையாடி உறிஞ்சுவதற்கு ஆளுநர் தொடக்கம் அரசாங்கம் வரை வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்றது. மண் வளத்தை விற்கின்ற பிள்ளையான் அபிவிருத்தி செய்ய முடியாது என்று கூறிக்கொண்டு இந்த வளங்களை அந்நியருக்கு விற்று வருகிறார்.அரசைக் கூலி. எமது கட்சி அடையாளப்படுத்திய

வியாழேந்திரன் தேசிய அரசியலில் இறங்கி அபிவிருத்திக்காக போனார். முடிய வில்லை என்று சொல்லி இன்று நேர் பாதையிலே சென்று கொண்டிருக்கின்றார்.

இந்த வேளையிலே நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும் .தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அன்று தொடக்கம் இன்று வரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்லது அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிந்தோ தெரியாமலோ ஆதரவளித்து வந்திருக்கின்றது. இதில் ஒளிவு மறைவு இல்லை.

இன்று அதே ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்திருக்கிறார்.

எனவே அந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களை செய்து எமது தமிழ் மக்களின் உரிமைகளை தேவைகளை எமது தமிழ்த் தலைமைகள் பெற்றுத்தர வேண்டும் என்று பல தமிழ்மக்கள் என்னிடம் கோரியிருந்தார்கள். அதனையே இங்கு நான் பகிரங்கமாக கூறுகின்றேன். கட்சித் தலைமைகள் சிந்திக்க வேண்டும் .நாங்கள் நாட்டைச் சூறையாடிய கொள்ளையர்களான மகிந்தவையோ கோட்டாவையோ ஒருபோதும் ஆதரிக்கவில்லை . ஆதரிக்கப் போவதுமில்லை.

69 லட்சம் வாக்குகளை சிங்கள மக்கள் அன்று வழங்கியிருந்தார்கள். இன்று அது தவறு என்பதை உணரத் தொடங்கி இருக்கின்றார்கள். ஆனால் நாம் அன்றும் இன்றும் ரணிலுக்கு ஆதரவாக இருந்திருக்கின்றோம். எனவே அவரைப் பயன்படுத்த வேண்டும். அது எமது தார்மீக கடமையும் நியாயமான உரிமையுமாகும். அதற்காக நாம் சோரம் போக தேவை இல்லை. அவருடன் நியாயமான உரிமைகள் பற்றி பேசி ஒப்பந்தம் உடன்படிக்கை செய்து தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். பாடசாலை கற்றலுபகரணங்களைக் கூட வாங்குவதற்கு பலர் கஷ்டப்படுகிறார்கள். இந்த மக்களுக்கு உதவ வேண்டும் .அம்பாறை மாவட்ட மக்கள் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இந் நிலையில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும். என்றார்.

# மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் சமுதாய மட்ட குழுக்கள் அங்குரார்ப்பணம்



(நூறுல் ஹுதா உமர்)

உலக வங்கியினால் அமுல்படுத்தப்பட்டு வரும் ஆரம்ப பராமரிப்பு சுகாதார நிறுவனங்களை மேம்படுத்தும் ககுகுக எனும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் சமுதாய மட்ட குழுக்களை அங்குரார்ப்பணம் செய்யும் வைபவம் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம். மிஹ்லார் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் ரிபாஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்ட குறித்த நிகழ்வில் மிக காத்திரமான ஆழமான கருத்துக்களுடன் கூடிய உரை ஒன்றையும் நிகழ்த்தியதுடன் வைத்திய சாலையின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கும் சமுதாய மட்ட குழுக்களுக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பணிமனை பிரதி பணிப்பாளர் டாகடர் எம்.பீ.ஏ வாஜித் மற்றும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம் சீ.எம் மாஹிர் ஆகியோரும் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிகள் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம்.எஸ். எம். ஜலால்தீன், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# திருக்கோணேஸ்வர ஆலய பிரம்மோற்ஸவம்

(அ . அச்சுதன்)

திருக்கோணேஸ்வரப் பெருமானின் பிரம்மோற்சவம் 05.04.2023 அன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி

21.04.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவமும்
22.04.2023 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தீர்தோற்சவமும்
23.04.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 06.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும்
24.04.2023 திங்கட்கிழமை மாலை 05.30 மணிக்கு தெற்ப உற்ஸவமும் இடம்பெறவுள்ளது.
மஹோற்சவ காலங்களில் 'அபிஷேகம்' காலை 08:00 மணி மாலை 03.30 மணிக்கும்.
'பூசை' காலை 09:00 மணி மாலை 04.30 மணிக்கும்.
'கொடித்தம்ப பூசை'காலை 10:00 மணி மாலை 05:00 மணிக்கும்.
'வசந்தமண்டப பூசை' காலை 11:00 மணி மாலை 06:00 மணிக்கும் இடம்பெறும்.

**திருவிழா உபயகாரர்களின் விபரம் :-**

04.04.2023 - திரு தங்கவடிவேல் சிவநாதன்
05.04.2023 - 1ம் திருவிழா - அமரர். மருத்துவர் கதிரித்தம்பி சுப்பிரமணியம் சித்திரவேல் குடும்பம்.
06.04.2023 - 2ம் திருவிழா - ஸ்ரீ விக்னேஸ்வரா இந்து பரிபாலன சபை
07.04.2023 - 3ம் திருவிழா - கொட்டியாபுரப்பற்று சைவ அன்பர்கள்
08.04.2023 - 4ம் திருவிழா - மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை
09.04.2023 - 5ம் திருவிழா - சாம்பல்தீவு சைவ அன்பர்கள்
10.04.2023 - 6ம் திருவிழா - காலை - இலங்கை புகையிரத திணைக்களம்
- மாலை - உவர்மலை சைவ அன்பர்கள்
11.04.2023 - 7ம் திருவிழா - மலையக சைவ அன்பர்கள்
12.04.2023 - 8ம் திருவிழா - காலை - வீதி அபிவிருத்தித் திணைக்களம் வீதி அபிவிருத்தி அதிகார சபை - மாலை - நீர்ப்பாசணத் திணைக்களம்
13.04.2023 - 9ம் திருவிழா - அஞ்சல் திணைக்களம்
14.04.2023 - 10ம் திருவிழா - கட்டுக்குளப்பற்று (கிழக்கு) சைவ அன்பர்கள்
15.04.2023 - 11ம் திருவிழா - திருகோணமலை வணிகர் சங்கம்
16.04.2023 - 12ம் திருவிழா - காலை - திருமதி இராஜேஸ்வரி வரதராஜன் குடும்பம்
- மாலை - திரு கந்தையா சிவலோகநாதன் குடும்பம்
17.04.2023 - 13ம் திருவிழா - காலை - திருகோணமலை நலன்புரிச்சங்கம் - கனடா
- மாலை - திரு நாகலிங்கம் இராமேந்திரா குடும்பம்
18.04.2023 - 14ம் திருவிழா - திருகோணமலை மாவட்ட கல்விப்பகுதி
19.04.2023 - 15ம் திருவிழா - ஏகாம்பரம்வீதி கடற்றொழிலாளர்கள் சங்கம்
20.04.2023 - 16ம் திருவிழா - யாழ்ப்பாணம் சைவ அடியார்கள்
21.04.2023 - 17ம் திருவிழா - திருக்கோணமலை நகராட்சி மன்றம்
22.04.2023 - 18ம் திருவிழா - காலை - திருக்கோணமலை நகராட்சி மன்றம்
- மாலை - திரு. இராஜரெத்தினம் தனஞ்சயன் குடும்பம்
23.04.2023 - பூங்காவனம் - திருமலை வங்கிகள் சபை
24.04.2023 - தெற்போற்சவம் - இலங்கைத் துறைமுக அதிகாரசபை -
25.04.2023 - பிராயச்சித்த அபிஷேகம் - மருத்துவர் வன்னியசிங்கம் குகேந்திரன் குடும்பம்
- வைரவர் பூசை - முருகுப்பிள்ளை கோணாமலை சங்கரதாஸ் குடும்பம்

# முறைகேடான ஆசிரியர் இடமாற்றமும், புறக்கணிக்கப்பட்டு வரும் புல்மோட்டை பாடசாலைகளும்!

(அபு அலா)

புல்மோட்டையிலுள்ள சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படும் இந்நிலையில், புல்மோட்டை ஜின்னா வித்தியாலயத்தில் கடமையாற்றும் விஞ்ஞானப்பாட ஆசிரியர் எஸ்.எம்.லத்தீபின் இடமாற்றத்தால் பாடரீதியான பாரிய தொரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக பெற்றோர்களும், அப்பிரதேச மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றம் உதவிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல் பிரிவு) மேகனேந்திரனின் திட்டமிட்ட இனரீதியான மற்றும் பிரதேச ரீதியான இடமாற்றங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு தகுந்த நடவடிக்கை எட்டப்படும்வரை எங்களின் போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கும் என அப்பிரதேச மக்களும், பெற்றோர்களும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உடனடி நடவடிக்கையினை எடுக்கக்கோரிய கடிதத்தினை பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களினால் கையொப்பமிடப்பட்ட கடிதங்கள் இன்று (03) ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர், கல்வி அமைச்சர் மற்றும் கல்வியமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அனுப்பி வைக்கப்பட்ட அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, க.பொ.த சாதாரண தர பரீட்சை நடைபெறவிருக்கின்ற இந்நிலையில், புல்மோட்டையில் காணப்படும் சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானம் மற்றும் கணிதப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடம் காணப்படும் நிலையில், புல்மோட்டை ஜின்னா வித்தியாலயத்தில் கடமையாற்றும் விஞ்ஞானப்பாட ஆசிரியரான எஸ்.எம்.லத்தீபின் இடமாற்றம் மூலம், பாடரீதியான பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான இடமாற்ற நடவடிக்கைகளில் திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றம் உதவிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல் பிரிவு) மேகனேந்திரனின் திட்டமிட்ட இன ரீதியான மற்றும் பிரதேச ரீதியான இடமாற்றங்களை செய்வருவதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவரின் இவ்வாறான செயற்பாடுகளின் ஆவனங்களை எங்களால் நிருபிக்கக்கூடியதாக இருக்கின்றது என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலயக்கல்வி அலுவலகம் ஓர் பழிவாங்கள் அலுவலகமாக திகழ்ந்து வருவதை, பெற்றோர்களாகிய நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இவ்விடயங்களைப் பார்க்கின்றபோது பெரும் கவலையளிக்கின்றது. அச்செயற்பாட்டை நாங்கள் மிக வன்மையாகவும் கண்டிக்கின்றோம். எனவே, இவ்வாறான திட்டமிட்ட இடமாற்றங்களை உடனடியாக ரத்துச் செய்வதுடன், அந்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கையினை ஜனாதிபதி உள்ளிட்ட கிழக்கு மாகாண ஆளுநர் அனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

# கூட்டுறவு மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்து தருவதில் பற்றுறுதியுடன் உள்ளோம்

## தலைமை கூட்டுறவு உத்தியோகத்தர் பரீட் உறுதி

(நூருல் ஹுதா உமர் )

கூட்டுறவு துறை மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்து தருவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் பற்றுறுதியுடன் செயற்படுகின்றது என்று அம்பாறை மாவட்டத்தின் கூட்டுறவு தலைமை உத்தியோகத்தர் எம். ஐ. எம். பரீட் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தால் வீரமுனை ஐங்கரன் கிராமிய மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 05 உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரம் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டது.

சங்கத்தின் தலைவி வித்தகர் எஸ். யு. செசலியா தலைமையில் வீரமுனையில் இடம்பெற்ற சம்பிரதாயபூர்வ கையளிப்பு வைபவத்தில் சமாச தலைவர் எஸ். லோகநாதன், சமாசத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். இராமகிருஷ்ணன், சங்கத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். இராஜசேகர் அடங்கலான பேராளர்கள் கலந்து கொண்டனர். இங்கு தொடர்ந்து பிரதம விருதினர் உரையாற்றியபோது பரீட் தெரிவித்தவை வருமாறு: கூட்டுறவு துறை மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொடுப்பதே கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் இலட்சிய நோக்கம் ஆகும். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொடுக்கின்ற வேலை திட்டங்களுக்கு உதவி, ஒத்தாசை, வழிகாட்டல் வழங்குவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளனர்.

நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு உள்ளது. இதனால் சுய தொழில் மற்றும் கைத்தொழில் முயற்சிகள் மூலமாக மேலதிக வருமானத்தை ஈட்டி வாழ்வாதாரத்தை கிராமிய மக்கள் சரி செய்ய வேண்டி உள்ளது

. அந்த வகையில் சமாசத்தால் வீரமுனை ஐங்கரன் கிராமிய மகளிர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்படுகின்றன. இவ்வாறான உதவிகள் மூலம் பயனாளிகளின் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும். அதே நேரம் துஷ்பிரயோகங்கள் இடம்பெற கூடாது

சமாச தலைவர் எஸ். லோகநாதன் பேசிய போது இந்த வருடம் சமாசம் மேற்கொண்டு உள்ள முதலாவது வாழ்வாதார மேம்பாட்டு திட்டம் இதுவே ஆகும், புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் எமது வேலை திட்டங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி வருகின்றனர், அந்த வகையில் தையல் இயந்திரங்களை வாங்குவதற்கு தனிப்பட்ட வகையில் நிதி பங்களிப்புகளை வழங்கிய புலம்பெயர் தமிழ் உணர்வாளர்களுக்கு இத்தருணத்தில் நன்றிகளை தெரிவிக்கிறேன் என்றார்.



# எதிலும் நாம் பலம் கோண்டவர்களாக இருந்தாலும் எம்மிடையே அன்பு, பணிவு, கீழ்படிதல் இல்லையேல் யாவும் வீணே

## அருட்பணி எஸ்.டிக்சன் அடிகளார்

(வாஸ் கூஞ்ஞ)

நாம் பணம் , பதவி பலம் கொண்டவர்களாக சகல திறமைகள் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் எம்மிடையே கீழ்படிதல் , பணிவு அற்ற நிலை மற்றவர்களுக்கு உதவி செய்யாத நிலையில் நாம் இருப்போமானால் எம்மிடம் எந்த பலம் இருந்தாலும் அவைகள் வீணே என்பதை மறக்கக்கூடாது. என அருட்பணி எஸ்.டிக்சன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.



குருத்தோலை ஞாயிறு தினக் கொண்டாட்டத்தின் போது பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் தனது மறையுரையில் அருட்பணி எஸ்.டிக்சன் அடிகளார் தெரிவிக்கையில்;

குருத்தோலை ஞாயிறு கத்தோலிக்க மக்களின் பரிசுத்த வாரத்தின் தொடக்க நாளாகவும் நுழைவாயிலாகவும் இன்றைய நாள் கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசு வாழ்ந்த இறுதி நாட்களில் அவர் முகம் கொடுத்த அனைத்து துன்பங்களையும் மீண்டும் நினைவு கூறும் நாளாகவும் இந்நாள் அமைகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயேசு பட்ட துன்ப துயரங்களோடு இன்றைய நாளில் எமது துன்ப துயரங்களை சிந்திக்கவும் இந்நாள் எமக்கு அமைகின்றது.

குருத்தோலை ஞாயிறு இன்றும் , பெரிய வெள்ளி அன்றும் கிறிஸ்துவின் பாடுகளை நாம் வாசித்து சிந்திக்கவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்றைய நாள் நாம் இறைவனுக்கு எதிராக செயல்பட்டதை சீர்தூக்கி பார்க்கவும் அன்று கிறிஸ்துவின் பாடுகளையும் இன்று நாம் படும் துன்பங்களையும் ஒருங்கிணைத்து சிந்திக்கும் அழைப்பாகவும் இந்நாள் அமைந்துள்ளது.

இன்றைய திருப்பலி இரு முக்கிய அம்சத்தைக் கொண்டுள்ளது. ஒன்று குருத்தோலை ஆலயத்துக்கு வெளியே ஆசீர்வதிக்கப்பட்டு அவற்றை ஏந்தி ஆலயத்துக்குள்ளே வந்ததும் அடுத்து கிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி வாசித்து சிந்திப்பது ஆகும்.

எமது வாழ்வு எப்பொழுதும் இன்பமும் துன்பமும் கலந்தது. குருத்தோலையுடன் எண்ணக்கருவோடு வந்த வாழ்வு நிலையற்றது. ஆனால் நாம் ஆலயத்தினுள் திருப்பலிபீடம் நோக்கி வந்தோம் இதுவே நிலையான வாழ்வாக அமைகின்றது.

இயேசு எமது பாவங்களை ஏற்று எமக்காக பாடுபட்டார். தன்னைத் தாழ்த்தி எமக்கு மீட்பை பெற்றுத் தந்தார்.

குதிரையில் இயேசு வருவார் என மக்கள் எதிர்பார்த்திருந்த வேளையில் அவர் கழுதையில் பவனி வந்தார். இது அவரின் தாழ்ச்சியை எமக்கு எண்பித்துள்ளது. இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு இலட்சியம் இலக்கு உண்டு. இதன் அடிப்படையில் கிறிஸ்து தந்தையின் திருவுளத்துக்கு அமைய எமக்காக மரித்தார்.

கிறிஸ்துவிடம் இறை வல்லமை இருந்தாலும் மக்களின் அன்புக்காக மக்களின் அமைதிக்காக மக்களின் சமாதானம் கருதி தன்னைத் தாழ்த்திக் கொண்டார். கிறிஸ்து தனது புதுமையாலும் உவமையாலும் கூறிய விடயத்தைவிட தனது உயிர்த்தெழுதலினாலே பல உண்மைகளை எடுத்துக் கூறியுள்ளார்.

தன்னைக் காட்டிக் கொடுப்பார்கள் இறுதி நேரத்தில் தனது அப்போஸ்தலர்களும் தன்னுடன் இருக்க மாட்டார்டகள் என இயேசுவுக்கு தெரிந்திருந்தும் அவர் அவர்களை ஏற்றுக் கொண்டார் இயேசு அவர்களை மன்னித்தார்.

இவ்வாறே எம்முடன் ஒன்றித்து வாழ்பவர்கள் துன்பத்தை உண்டு பண்ணுவார்கள் காட்டிக் கொடுப்பார்கள் எமக்கு எதிரிகளாக இருக்கும் சமூகத்தையே நாம் பார்க்கின்றோம்.

நாம் பலம் கொண்டவர்களாக சகல திறமைகள் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால் எம்மிடையே பணிவு அற்ற நிலை மற்றவர்களுக்கு உதவி செய்யாத நிலையில் நாம் இருப்போமானால் எம்மிடன் எந்த பலம் இருந்தாலும் அவைகள் வீணே என்பதை மறக்கக்கூடாது.

ஆகவே எம்மிடம் கீழ்படிதல் , ஏழ்மையின் வடிவம் குடியிருக்க வேண்டும் என்பதை நாம் சிந்திக்க இந்நாள் எமக்கு அழைப்பு விடுத்துள்ளது என இவ்வாறு தெரிவித்தார்.




# பேசாலையில் குருத்தோலை தினக் கொண்டாட்டம்







(வாஸ் கூஞ்ஞ)

அகில உலகத்தில் கத்தோலிக்க திருச்சபையானது குருத்தோலை ஞாயிறு தினத்தை 02.04.2023 அன்று நினைவு கூர்ந்தது.

இவ்தினம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமைகளில் கொண்டாடப்படுகின்றது.

அதாவது ஜெருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிகரமான பிரவேசத்தை கத்தோலிக்க மக்கள் கொண்டாடும் தினமே இவ்தினமாகும்.

இவ்தினத்தை பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய மக்கள் விற்றரிஸ் வளாகத்திலிருந்து குருத்தோலைகளை கையிலேந்தியவண்ணம் ஆரம்பித்து வெற்றி அன்னை ஆலயம் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர்.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஏற்பாட்டில் உதவி பங்குத் தந்தை அருட்பணி எஸ்.டிக்சன் தலைமையில் அமல மரி தியாகி சபை மறைபோதகர் அருட்பணி ப.ஜெறோம் லெம்பேட் அடிகளாரின் பங்கேற்றலுடன் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

# சுவிஸ் உதயம் அமைப்பின் நிர்வாகக்கட்டிடத்திறப்பு விழா



(எஸ்.சபேசன்)

மட்டக்களப்பு திராய்மடு பனிச்சையடியில் அமைக்கப்பட்ட சுவிஸ் உதயம் அமைப்பின் நிர்வாகக்கட்டிடத்திறப்பு விழா செவ்வாய்க்கிழமை அமைப்பின் தலைவர் ஓய்வுநிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் மு.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

2004 ஆம் ஆண்;டில் இருந்து பாதிக்கப்பட்ட மக்களின் நன்மை கருதி பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுத்து வரும் சுவிஸ் உதயம் அமைப்பானது புதிதாக நிர்வாகச் செயற்பாட்டிற்காக புதிதிதாக அலுவலகம் அமைக்கப்பட்டு அதனைத் திறந்துவைத்துள்ளது இந்நிகழ்வில் தாய்ச்சங்கத்தின் தலைவர் டி.எல்.சுதர்சன் செயலாளர் அம்பலவாணர் ராஜன் பொருளாளர் சமூகசேவகர் க.துரைநாயகம் மட்டக்களப்பு மாநகர முன்னாள் முதல்வர் தி.சரவணபவான் ஏடு அமைப்பின் தலைவர் ஓய்வுபெற்ற கணக்காளர் ஜெபராஜ் மற்றும் சுவிஸ் உதயம் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.



சொல்லத் துடிக்குது மனசு: 08

# மனமகிழ்வைத்தரும் மாட்டினால் சூடுமிதித்தல் நிகழ்வு

களவெட்டி காவல் செய்து கருத்துடனே
மாடுகட்டிச் சூடும் மிதித்திடுவோம்

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் கிராமங்களில் கட்டுக் குலையாத மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், உறவு முறைகள் பேணப்பட்டன. அவற்றுள் ஓர் இனம் புரியாத ஈர்ப்புடன் மக்கள் வாழ்ந்து வந்தனர். கிராம ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியன சிறப்பாகப் பேணப்பட்டன. எந்தக் கருமத்தையும் நாள் நச்சத்திரம் பார்த்தே ஆரம்பித்தனர். எந்தச் செயலிலும் ஒரு ஈடுபாடு காணப்பட்டது. ஊரும் உறவும் கூடிச் செயலில் ஈடுபட்டனர். கோயில் திருவிழாக்கள், சித்திரை புதுவருடப் பிறப்பு என்றாலே ஊர் களைகட்ட ஆரம்பித்துவிடும். மக்களின் வாழ்க்கை முறையும் நாளாந்தச் செயற்பாடுகளும் சந்தோசம் மகிழ்ச்சியோடு கடந்து சென்றன. இந்த மகிழ்ச்சியின் ஒரு வெளிப்பாடுதான் மாடு கொண்டு சூடுமிதிக்கும் செயற்பாடு.

அறுவடையின் பின்னர் வயல் காணிக்குள் களவெட்டி செருக்கி வைக்கப்பட்ட சூடுகள் வைகாசி, ஆனி, ஆவணி மாதங்களில் சூடு மிதிக்கப்படும் வரையும் வேலிகட்டிப் பாதுகாப்பாக வைத்திருப்பர். இருபோகம் வேளாண்மை செய்யும் வயல்களில் நீர் சென்று சூடுகளைப் பாதிக்காத வகையில் மண், களி கொண்டு களவெட்டியிளை நிரந்தரமாக உயரத்தி அமைத்திருப்பர். சூடுமிதிப்பதற்கு ஏற்றால்போல் பத்துப் பாக அகலத்திலும், பதினைந்து பாக நீளத்திலும் களவெட்டி அமைக்கப்பட்டிருக்கும். இடைப் போகத்தில் வயல்களுக்குப் பாய்ச்சப்படும் நீரினால் சூட்டுக்கோ அல்லது சூடு மிதிப்பதற்கோ எத்தகைய பாதிப்பும் ஏற்படாத வகையில் களவெட்டியை அமைத்திருப்பார்கள்.

சூடுமிதிப்பதற்குப் பஞ்சாங்கத்தில் உரிய நாள், நச்சத்திரம் பாரத்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். களவெட்டி செருக்குதல், படங்கில் உள்ள ஓட்டைகளைத் தைத்தல், கூலி ஆட்களை ஒழுங்கு செய்தல, மாடுகளை ஒழுங்கு செய்தல், வேலைகாரன் கம்பு, கைப்பெட்டி, கடகம், மரைக்கால், பொலிக்கொடியைக் (மிதிக்கப்பட்டு வைக்கோல் நீக்கப்பட்ட நெல்) கூட்டிச் சுத்தப்படுத்துவதற்கான மிலாற்றுத்தடி, களவெட்டியைக் காவல் செய்து பொங்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் ஆகியவற்றைச் சிறப்பான முறையில் பக்தி, விசுவாசத்தோடு ஒழுங்குபடுத்துவார்கள். குறிக்கப்பட்ட தினத்தில் ஒழங்கு செய்யப்பட்ட பொருட்களுடன் மூன்று புணையல் (ஆறு மாடு, பிணையலில் இணைத்துக் கட்டப்பட்ட) மாடுகளையும் சாய்த்துக் கொண்டு பொழுது சாய்வதற்கு முன்பாகக் மாட்டு வண்டியில் களவெட்டிக்குச் செல்வார்கள். அங்கு களவெட்டியைக் காவல் செய்தல், பொங்கலுக்குரிய ஏற்பாடுகளைப் பயபக்தியுடன் ஏற்பாடு செய்வார்கள்.

சூடுமிதிக்க அரம்பிப்பதற்கு முன்னர் சூடுமிதித்து முடியும்வரை (சில இடங்களில் ஏழு, எட்டு நாள்வரை செல்லும்) களவெட்டியினுள் துஷ்டசக்திகள் நெருங்காதிருப்பதற்காகக் களவெட்டி காவல் பண்ணப்படும். வைரவருக்குப் பொங்கல், உரொட்டி படைத்து, களவெட்டியின் மத்தியில் ஒரு அடி ஆளத்த்தில் குளிவெட்டி அரக்குத் தாக்கப்படும். ஒரு முளம் நிளமான வேப்பம் கம்பு(தடி) ஒன்று வெட்டி, அதனை நன்கு சீவி, கழுவித் திருநீறு, சந்தணம், குங்குமம், மஞ்சள் அகியன பூசி, வாழைப்பம் மூன்று, வெற்றிலை மூன்று, பாக்கு மூன்று ஆகியன சேரத்து வைரவராகப் பாவனை செய்யப்பட்ட வேப்பம்தடி ஆகியவற்றை வைரவ மடையில் வைத்துத் தூப, தீபம் காட்டிப் பூசித்து தேவாரம், புராணம் பாடிக் கும்பிட்டுக் குறித்த பொருள் அனைத்தையும் வெட்டப்பட்ட குழியினுள் வைத்துக் குழியை மூடிவிடுவார்கள். பின்னர் தண்ணீர் தெளித்துப் படையலைப் பிரித்து சகலருக்கும் பகிர்ந்து கொடுப்பார்கள். மாடுகளுக்குத் திருநீறு, சந்தணம், குங்குமம் சாத்திப் படங்கினை விரிப்பார்கள். சில இடங்களில் படங்கு இல்லாதபோது களவெட்டி களி நிலமாக இருக்கும் படசத்தில் களவெட்டியை நன்கு செருக்கிச் சுத்தப்படுத்தி இருப்பார்கள். களவெட்டியின்மேல் விரிக்கப்பட்ட படங்கில் அல்லது செருக்கிச் சுத்தப் படுத்தப்பட்ட களவெட்டியில் நெற்கதிர்களைக் குவியலாகக்(போர்) குவிப்பார்கள்.

சூடு தள்ளுவதற்காக வேலைக்காரன் கம்புடன் ஒருவர் அல்லது இருவர் சூட்டின் மேலே ஏறுவர். சூட்டில் இருந்து தள்ளப்பட்ட நெற்கதிர்களை(உப்பட்டி, உருப்படி) இரண்டு காவுகளில் கொண்டு சென்று களவெட்டியின் மத்தியில்(அரக்குப் புதைக்கப்பட்ட இடத்தை மையப்படுத்தி) நான்கு பேர் இருவர் இருவராகக் காவுகளில் கொண்டு போய்ப் போர ஏற்றுவர். காவுகளுக்காக ஆறு முளம் (ஒன்பது அல்லது பத்து அடி நீளமான இவ்விரு கம்புகள்(நான்கு தடிகள்) பயன்படுத்தப்படும். இரண்டு தடிகளின் முனைகளிலும் இரண்டு பேர் நின்று காவினைத் தூக்குவர். பெரிய சூடாயின் இரண்டு மூன்று நாட்களிலும் சிறிய சூடாயின் ஒரு நாளிலும் சூடு மிதிப்பார்கள். போர் ஏற்றியதும் மூன்று புணையல் மாடுகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவார்கள். இதில் சூடுமிதிப்பதற்கென்றே பழக்கப்படட அரக்குமாடு நெற்போரோடு (குவியலோடு) இணைந்தால் போல் வலப் பக்கமாக நின்று வட்டமாகச் சுற்றிவரும். ஏனைய ஐந்து மாடுகளும் அரக்கு(மெதுமெதுவாக அரக்கி அரக்கிச் சுற்றி வருவதனால அரக்கு மாடு எனப்பட்டது) மாட்டில் இருந்து விலகிச் செல்லாத வண்ணம் சுற்றிக் கொண்டு வரும். மாடுகளை மேய்ப்பதற்கு படடிக்காரன் செயற்பட்டுக் கொண்டிருப்பார். மற்றையவர்கள் மிகுதிப் பொங்கலை அடுத்துவரும் நாட்களில் உண்பதற்காக பொங்கலை வாழை இலையில் வைத்து வைக்கோலினால் இறுக்கிக் கட்டி வைப்பார்கள். அப்பொங்கல் பழுதுபடாமல் பலநாட்கள் இருக்கும். அதனை மறுநாள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வர். மீதியை அடுத்த அடுத்த தினங்களில் சூடுமிதிக்கும்(சூடடித்தல், சூடு போடுதல்) போதும் நெல் தூற்றும் போதும் உண்பர்.

சூடு மிதிக்குமபோது உரிய பாடல்களைப் பாடிக் கொண்டு மாட்டை ஓட்டுவர். மாடுகள் சிறுநீரை நெற்கதிர்மேல் கழித்துவிடும். ஆறு மாடுகள் என்பதால் சிறுநீரைப் பாத்திரத்தில் எடுப்பது சிரமம். ஆனால் மலம் கழிக்கும்போது கோல் போடு, கோல் போடு எனக் கூறிக் கொண்டு வைக்கோலை எடுத்துப் பிடிப்பார்கள். சாணம் வைக்கோலில் விழும். அதனை களவெட்டிக்கு வெளியே வீசி விடுவார்கள். மாடுகளின் காலடி பட்டு நெல்மணிகள் கதிரிலிருந்து பிரிந்து வேறாகியதும் மாடுகளை களவெட்டியில் இருந்து வெளியேற்றி அருகில் நிறுத்திவிட்டு வேலைகாரன் கம்பினால் வைக்கோலைக் கொழுவித் தள்ளி(வாட்டி) வெளியேற்றுவர். வைக்கோல் வெளியேற்றி முடிந்ததும் மீண்டும் சூடுதள்ளிக் காவுகளில் நெற்கதிர்களைக் கொண்டு வந்து களவட்டியின் மத்தியில் முன்புபோல் போரேற்றுவர். நெற்கதிர்களின் குறிப்பிட்ட அளவு போரேற்றப்பட்டதும் மீண்டும் மாடுகளைக் கொண்டுவந்து சூடுமிதிப்பர். வாட்டிய வைக்கோல் யாவும் வீடு வேய்வதற்காக அடிக்கப்பட்டுப் வைக்கோல் புரியிட்டுக் கட்டுக்களாகக் கட்டப்படும். பிற்பகல் வேளையில் காற்றில் நெல்லைத் தூற்றுவதற்காக ஆறடி நீளமான மூன்று கம்புகளை வைத்து வைக்கோல் புரியினால் கெட்டியாக அவுரி(முக்காலி) ஒன்றோ இரண்டோ கட்டுவர். இவ்வாறு காலை வரை இச்செயற்பாடுகள் நடைபெறும். களவெட்டியில் இருந்து வைக்கோலை வாட்டி எடுத்த பின்னர் காயான் மிலாறு வைத்துக் கட்டப்பட்ட தடிகளைக் கொண்டு மிராறினால் பொலிக்கொடியை(நெல்லை) சுத்தப்படுத்துவர். சுத்தப்படுத்தி முடிந்ததும் நெல்லை நெற்போராகக் குவிப்பர். அதனைப் படங்கினாலும் ஐவக்கோலினாலும் மூடிவிட்டு, மாடுகளைப் புணையல்களாக்கித் தண்ணீர் கொடுத்துப் புல் மேய விட்டு, வீட்டுக்குச் செல்வர். மாடுகளுக்குப் பொறுப்பாகப் பட்டிக்காரன் செயற்படுவார்.

பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர்(பொழுது சாய்ந்ததும்) மரைக்கால்(சின்னவாயன்), கைப்பெட்டி(பெரியவாயன்), கடகம்(ஐந்து மரைக்கால் கொள்ளளவு கொண்ட பிரம்பினால் பின்னப்பட்ட பாத்திரம்), சணல் சாக்குகள், கோணி ஊசி, மாலையில் வேளையில்வைரவருக்குப் படையல் வைப்பதற்கான பொருட்கள் ஆகியவற்றுடன் களவெட்டிக்கு அத்தனை பேரும் வந்து சேருவர். நெற்போரின் அளவைப் பொறுத்து அவுரிகள் ஒன்று அல்லது இரண்டைப் பயன்படுத்துவர். அவுரிகள் இரண்டாயின் இருவரும் ஒன்றாயின் ஒருவரும் காற்றுவரும் திசை பார்த்து அவுரியை வைத்து அதன் மேல் ஏறுவர். கீழே ஒருவர் நின்று நெல்லைத் தூற்றுவதற்காகப் பொலிக் கொடியைக் கைப்பெட்டியில் அள்ளிக் (கட்டிக்) கொடுப்பார். அவரே மிலாற்றுத் தடியினால்





சோலையூர்க்
குருபரன்



பொலிதாயே பொலி தம்பிரானே பொலி
பூமிபொலி பூமாதேவிதாயே
மண்ணின் களமே மாதாவே நிறைகளமே
பொன்னின் களமே பூமாதேவியம்மா பொலி
பொலி பொலியே

என்ற பொலிப் பாடலைப் பாடிக் கொண்டு பொலியைத் திருத்துவார். இந்தப் பாடல் இயற்கைக்கும் தெய்வத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நாட்டார் பாடலாக அமைந்துள்ளது.

ஏனையோர் ஒருவர் பொலிக் கொடியில் இருந்து மரைக்காலால் அளக்கப்படும் முதல் நெல்லை கோயிலுக்கும்(சுவாமிக்கு), வீட்டுக்கும் கொண்டு செல்வதற்கு வைக்கோல், வைக்கோல் புரிகளைக் கொண்டு இரு கோட்டைகளைக் கட்டுவர். ஏனையோர் வைரவருக்குப் படையல் வைத்து வழிபடுவதற்காக அரிசி மாவினால் உரொட்டி சுடுவதிலும் ஏனைய வேலைகளிலும் ஈடுபடுவர். நெல் தூற்றி முடிந்ததும் ஒருவர் தலைப்பாகை கட்டிச் சுவாமியை வணங்கி மரைக்காலினால் முதலாவதததாக அளக்கப் படும் ஒரு மரைக்கால் நெல்லை கோட்டையில் இட்டுக் கட்டுவர். மற்றைய கோட்டையில் வீட்டுக்குக் கொண்டு செல்வதற்கு ஒரு மரைக்கால் நெல்லையும் இட்டுக் கட்டுவர். சிலவேளை மூன்று மரைக்கால் வரையும் கோட்டைகளில் நெல்லை இட்டுக் கட்டுவர். பின்னர் மற்றைய நெல்லை மரைக்காலால் அளந்து சாக்குகளில் இட்டுச் சணல் கொண்டு கோணி ஊசியினால் பின்னிக் கட்டுவர். முன்னைய கணக்கின் படி முப்பது மரைக்கல் கொண்டது ஓர் அவணமாகக் கொள்ளப்படும். இக்கணக்கெடுப்பு ஆதிகாலம் முதல் கைக்கொள்ளப்பட்டு வருவதாக போர்த்துக் கேயரின் குறிப்புக்கள் கூறுகின்றன.

சாக்குகளில் நெல்லைக் கட்டி முடிந்ததும் எல்லோருமாகச் சேர்ந்து களவெட்டியில் அரக்குப் பதித்த இடத்தில் பழம், பாக்கு, வெற்றிலை, உரோட்டிகளைக் கொண்டு வைரவருக்கு மடை வைத்துக் கும்பிடுவர். இச்செயற்பாடு இறுதிநாள் வரை நடைபெறும். வைரவர் மடையைப் பிரித்துக் களவெட்டிளைச் சுத்தப்படுத்தி படங்குகளை விரித்துச் சூடுதள்ளிக் காவுகளில் கொண்டு சென்று நெற்கதிர்களைப் போராகக் குவித்து மாடுகளைக் கொண்டு சுடு மிதிப்பர். இச்செயற்பாடு இறுதிநாள் வரை தொடர்ந்து நடைபெறும். களவெட்டிக்கு ஒளி ஊட்டுவதற்காக ஹரிக்கன் இலாம்பு அல்லது பெற்றோல்மாக்ஸைப் பயன்படுத்துவார்கள். தூற்றப்பட்டு, சாக்குகளில் கட்டி மூடைகளாக்கப்பட்ட நெல்லைத் தினமும் காலையில் மாட்டு வண்டிலில் ஏற்றி வீட்டுக்கு எடுத்துச் செல்வார்கள். சூடுமிதிக்கும் எருமை மாடுகளைப் பட்டிக்காரனே பெரும்பாலும் வழிநடத்துவார்.

இறுதி நாளில் பிற்பகலில் நெல்லைத் தூற்றிய பின்னர் சூடு போட்ட (கூலியாட்கள்) கூலி, பயன்படுத்திய மாடுகளுக்குரிய கூலி, வட்டைவிதானை, முல்லைக்காரன், வேளாண்மைகாரன் கூலி. வேளாண்மை வெட்டிய முகாமைக்காரன் கூட்டத்துக்கான கூலி, தானம் கொடுத்தல் ஆகியவற்றை எல்லாம் கொடுத்து முடித்த பின்னர் மிகுதி நெல்லைச் சாக்குகளில் கட்டி மூடைகளாக்குவர். மிகுதிப்பேர் இறுதிநாள் பொங்கல், உரொட்டி சுடுதல், மடை வைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவர். இறுதிநாள் பூசையில் களவெட்டியின் மத்தியில் முதல்நாள் குழியில் புதைக்கப்பட்ட அரக்குப் பொருட்களை வெளியே எடுத்து நீர்க்கரையில் கொண்டு போய்ப் போடுவர். பூசை முடிந்ததும் பூசைப் பொருட்களை வந்திருப்பவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்த பின்னர் நெல் மூடைகள், எஞ்சிய பொருட்கள் எல்லாவற்றையும் மாட்டு வண்டியில்ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிப் புறபட்டுச் செல்வர்.

இந்த மரபுகள், சம்பிரதாயம், பழக்க வழக்கம் ஆகியன உளவு இயந்திரமும், அறுவடை இயந்திரமும் பாவனைக்கு வந்த பின்னர் மறைந்து போய்விட்டன. அங்கு பயன்படுத்தப்பட்ட கைப்பெட்டி, மரைக்கால், கடகம், வேலைக்காரன் கம்பு, அவுரி, காவுத்தடி, அரக்கு ஆகியன மறைந்து போய்விட்டன. அந்தப் பக்தி பூர்வமான செயற்பாடுகளும் இப்போதில்லை. நாள், நச்சத்திரம் பார்ப்பதெல்லாம் குறைந்து செல்கின்றன. இதுதான் கிராமத்தின் கலாசாரப் பிழ்வா என எண்ணத் தோன்றுகிறது.

ஊர்கூடிச் சிரத்தை பக்தியோடு
பக்குவமாய் நடத்தப்படும் சக்கரை அமுது

தொடரும்....

# கண்ணிவெடி அகற்றும் இலங்கையின் இறுதி மூலோபாய நடவடிக்கை

(முனீரா அபூபக்கர்)



கண்ணிவெடி அகற்றும் இலங்கையின் இறுதி மூலோபாய ஒழுங்கமைப்பை வெளிப்படுத்திள்ளது. அதன்படி, 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் திரு.பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கு அமைய கண்ணிவெடிகளை அகற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்படி, இலங்கையில் கண்ணிவெடி அகற்றுவதற்கான இறுதி மூலோபாய ஒழுங்கமைப்புத் திட்டத்தை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா தலைமையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் கடந்த31 ம் திகதி நடைபெற்றது. இந்த வேலைத் திட்டத்திற்கு கலந்து கொண்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இந்நாட்டில் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான திட்டம் அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்பட்டது.

ஜெனிவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் நிலையத்தின் ஆதரவுடன் தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்காளரர்களுடன் நெருக்கமாக பணியாற்ற இருப்பதாக அரசாங்கம் எதிர்பார்த்தள்ளது. 2002 ஆம் ஆண்டு முதல், கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டில் இயங்கி வருகின்றதுடன், 2010 ஆம் ஆண்டு ?தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையம்? ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கிய இந்த நிலையம் தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் செயற்படுகின்றது. இது கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வழிநடத்துவதோடு கண்காணிக்கிறது.

இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நேரடி பங்களிப்பை வழங்குவதோடு அது இலங்கை இராணுவத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அலகுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. அதுமட்டுமின்றி இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இரண்டு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவுக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது. மற்ற 4 அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்த திட்டத்திற்கு ஆதரவை வழங்கும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வழங்கப்படுகிறது.

இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து ஆளணிக்கு எதிரான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. 'தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின்படி ?, கிட்டத்தட்ட 15 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட உள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) டபிள்யூ.எம். ஆனந்த, ஜெனிவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் மையத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஓசா மஸ்லிபெர்க், தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் வீ. பிரேமச்சந்திரன், இலங்கை இராணுவத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அலகின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.கே. ஜயவர்தன, பிரதம அதிகாரி (2) மேஜர் ரஜித அம்பலன்பிட்டிய உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தெய்வீக கிராம நிகழ்வு





இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்ட செயலகம், மொறவெவ பிரதேச செயலகம் மற்றும் பன்குளம் பிள்ளையார் ஆலயம் இணைந்து நடாத்தும் தெய்வீக கிராம நிகழ்வு சனிக்கிழமை பன்குளப் பிள்ளையார் ஆலயத்திலே மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பின் தங்கிய கிராமம் ஒன்றை தெரிவு செய்து அங்கு இருக்கும் மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்கு ஒற்றுமையையும் இறை நம்பிக்கையையும் போதிப்பதே இவ் தெய்வீக கிராம நிகழ்வின் முக்கிய நோக்கமாக கருதப்படுகின்றது.

இந்நிகழ்வில் கலை கலாசார பண்பாட்டு ஊர்வலமானது பன்குளம் பிள்ளையார் ஆலய முன் வீதியில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மரநடுகை நிகழ்வும் சிறப்பாக நடந்தேறியது. மேலும் மாணவர்களின் வரவேற்பு நடனம், பேச்சு மற்றும் பஜனையும் அனைவராலும் கவரப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான 'தெய்வீக அன்புச்சிறார்கள்' திட்டத்தின் கீழ் பரிசில்களும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக மகேஸ்வர பூஜை என்று அழைக்கப்படும் அன்னதானமும் வழங்கப்பட்டு நந்திக்கொடியிறக்கத்துடன் இத் தெய்வீக நிகழ்வானது இனிதே முடிவடைந்தது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எஸ். அருள்ராஜ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

மொறவெவ உதவி பிரதேச செயலாளர் கே. சத்தியபிரியா , உதவி திட்டமிடல் பணிப்பாளர் துஷ்யந்தன், மாவட்ட இந்து சமயக் கலாசார உத்தியோகத்தர் இலக்குமிதேவி சிறீதரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் சோ.ச.லதாமங்கேஸ், மொறவெவ பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், ஔவை நகர் தமிழ் கலவன் பாடசாலை, நொச்சிக்குளம் தமிழ் கலவன் பாடசாலை, கலைமகள் அறநெறி பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நல்லிணக்க இப்தார் நிகழ்வு



திருகோணமலை மாவட்ட கங்கதலாவ ஐக்கிய ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாடு செய்த நல்லிணக்க இப்தார்( நோன்பு திறக்கும் ) நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கந்தளாய் ஆயிசா மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச் .என்.ஜயவிக்ரம கலந்து கொண்டார்.

செய்த பாவங்களுக்கு பரிகாரம் தேடல், தேவையுடையவர்களுக்கு உதவுதல் , பயபக்தியை தம்முள் ஏற்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்களை கொண்டமைந்ததாக நோன்பு காணப்படுகின்றது. இப்பண்புகள் இஸ்லாம் சமயத்தை போன்று ஏனைய சமயங்களிலும் காணப்படுவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மௌலவிமார்கள், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், ஊர் ஜமாஅத்தினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# விழிப்புணர்வாக பெண்களின் மரபுசார் உணவு கோண்டாட்டம்

( வாஸ் கூஞ்ஞ)



முன்னோர்கள் இன்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு மரபுசார் உணவுகளே அடித்தளமாக இருந்தது ஆனால் இன்று நாங்கள் காலனித்துவ பொருளாதாரத்திற்குள் சிக்கி எமது ஆரோக்கியமான வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருப்பதால் விழிப்புணர்வாக பெண்களின் மரபுசார் உணவு கொண்டாட்டம் மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 01.04.2023 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் இலுப்பைக்கடவை தமிழ் வித்தியாலயத்தில் பெண்களின் மரபுசார் உணவு கொண்டாட்டம் குறித்த நிகழ்வு கொண்டாடப்பட;டது.

இவ் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் , மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் , மாதர் அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பாலியாறு , இலுப்பைக்கடவை , பறங்கிகமம் , கள்ளியடி , சவிரிகுளம் , இத்திக்கண்டல் மற்றும் வேட்டையான்முறிப்பு ஆகிய மாதர் சங்கங்கள் தங்களது மரபுசார் உணவுப் பொருட்களை பார்வைக்கு வைத்திருந்ததுடன் அவர்களது மரபுசார் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நடைபெற;ற மரபுசார் உணவு கொண்டாட்டமானது எங்களால் மறக்கப்பட்ட மறைக்கப்பட்ட உணவுகளின் மகத்துவத்தை உணர்த்துவதும் அவற்றை எதிர்கால சந்ததிக்கு அறிமுகப்படுத்தவும் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எங்களது முன்னோர்கள் இன்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு மரபுசார் உணவுகளே அடித்தளமாக இருந்தது ஆனால் இன்று நாங்கள் காலனித்துவ பொருளாதாரத்திற்குள் சிக்கி எமது ஆரோக்கியமான வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.

முன்னோர்கள் உண்டு வந்த பாரம்பரிய உணவுகளை மறந்து விட்டு கோடி கோடியாக இப்பொழுது மருத்துவமனைகளுக்கு மருந்துகளுக்கும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம்.

எனவே நலமான ஆரோக்கியமான எதிர்காலம் ஒன்றிற்காக நாம் நம் மரபு சார்ந்த உணவுகளை கொண்டாடவும் அவற்றை மீண்டும் பழக்கத்திற்கு கொண்டு வரவும் தேவைப்பாடு உடையவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்த்துவதே மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மரபுசார் கொண்டாட்டம் ஆகும் என மன்னார் மாதர் ஒன்றியத் தலைவி மகாலெட்சுமி இவ்வாறு தெரிவித்தார்.

# கோபத்தில் சென்றவர் சடலமாக மீட்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

குடும்பிமலை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச் சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடும்பிமலை காட்டுப் பகுதியில் வைத்தே இந்த சடலம் சனிக்கிழமை (1) மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிரான் பாடசாலை வீதியைச் சேர்ந்த 69 வயதுடைய பசுபதி ராகவன் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் கடந்த 29 ஆம் திகதி குடும்பத்தாரிடம் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றவர் என பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை தோழில் நுட்பக்கல்லூரிக்குள் புகுந்த காட்டு யானையால் கட்டிடங்கள் சேதம்

சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரிக்குள் நுழைந்த காட்டு யானை கல்லூரியின் மாணவர்களால் 10 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட விவசாய பண்ணையை முற்றாக அழித்து நாசமாக்கியுள்ளதுடன் கட்டிடங்களுக்கும் சேதத்தை உண்டு பண்ணியுள்ளன.

இக்காட்டு யானையின் அட்டகாசத்தினால் தென்னை வாழை மரக்கறி வகைகள் உட்பட பல பலன் தரும் மரங்களை நாசமாக்கியுள்ளன.

தொழில் நுட்பக் கல்லூரியின் மதில்கள் பலவற்றை உடைத்து நாசமாக்கியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக தொழில் நுட்ப திணைக்கள உதவி பணிப்பாளர் எஸ்.சீ.ஜெகத்துடன் சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி சிரேஸ்ட விரிவுரையாளரும் பகுதித் தலைவருமான எஸ்.ரவீந்திரன் தொடர்பு கொண்டதையடுத்து சேத விபரங்களை திரட்டுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

யானை வெடிகளைக் கொழுத்தி யானையை மீண்டும் காட்டுக்குள் அனுப்பினர்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த காட்டு யானைகளை நிரந்தரமாக விரட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வவுனியா வேடுக்குநாறி மலைக்கு அமைச்சர் ஜீவன்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலைக்கு (2) விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஆலய நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன், உரிய ஆவணங்களையும் கோரினார். மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர், விக்கிரகங்கள் ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இப்பிரச்சினை சுமுகமாக தீர்த்துவைக்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறி மலை விவகாரம் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வெடுக்குநாறி மலை விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (03) நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜீவன் தொண்டமான் பிரஸ்தாபிக்கவுள்ளார். வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறி மலைக்கு களப் பயணம் மேற்கொண்ட இ.தொ.கா வின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் முதலில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். அதன் பின்னர் ஆலய நிர்வாகத்துடன் கலந்துரையாடினார். ஆலய நிர்வாகத்திடம் உரிய ஆவணங்கள் இருக்கவில்லை. அவற்றை ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் கோரினார்.

இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் இருப்பதால், சட்டத்துக்கு மதிப்பளித்து, தீர்ப்பு வெளியான பின்னர், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். ஈபிடிபியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், இதொகாவின் தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், கலாநிதி ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா உட்பட பலர் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

# இலங்கை சமாதான நீதிவான்கள் பேரவை இன் புதிய ஆளுநர் சபை





(சில்மியா)

இலங்கை சமாதான நீதிவான்கள் பேரவை இன் புதிய ஆளுநர் சபை கூட்டம் பேரவையின் தலைவர் கலாநிதி ஏ எம் எம் பஹத் தலைமையில் அண்மையில் பி எம் ஐ சி எச் இல் இடம் பெற்றது.

அடுத்த மூன்று வருடங்களுக்கான ஆளுநர் சபை புதிய பணிப்பாளர் சபை என்பவற்றிற்கான நியமனங்கள் இதன் பொது வழங்கப்பட்டன.

ஆளுநர்சபை பிரதானியாக வணக்கத்துக்குரிய கிரி இப்பான்னரேவிஜித தேரர் அவர்கள் தலைவரால் நியமிக்கப்பட்டார். மேலும் ஆளுந்த சபை பிரதானி ஏனைய ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கு நியமனங்களை வழங்கினார்.

ஆளுநர் சபை உறுப்பினர்களாக நிஹால், நிதிலா ஜேசுசுந்தரம், செகிகா ஜயவர்த்தன , சிசிரா ஜயகொடி, ஜன்ரகான்த் சந்ரா நெஹ௸, எம்.எம். முனீர், எஸ்.எம், நாசிம், றியாபா என பலரும் நியமிக்கப்பட்டனர்.

பேரவையின் தேசிய பணிப்பாளராக கலாநிதி இளங்கோ காந்தி அவர்களும் பிரதி தேசிய பணிப்பாளராக கலாநிதி MI Fozeel அவர்களும் திட்டமிடல் பணிப்பாளராக TSM Akkash அவர்களும் அங்கத்துவ பணிப்பாளராக B Prasath அவர்களும் நியமிக்க பட்டனர் என்பது குறிப்பிடக்கது.

# உழைக்காமல் வாழுகின்ற கூட்டம் ராஜபக்ச கூட்டம்

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

நமது நாட்டில் உழைக்காமலே வாழுகின்ற ஒரு கூட்டமே மஹிந்த ராஜபக்வின் கூட்டம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



அக்கரப்பத்தனை பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த வேலுசாமி இராதாகிருஷ்ணன்.

பொருளாதார நெருக்கடியால் இருக்கின்ற எமது நாட்டிற்கு முதலீட்டாளர்களை தடுக்கும் வகையில் மஹிந்த ராஜபக்வின் அரசாங்கம் செயல்பட்டு வந்துள்ளது ஆகையால் தான் நாட்டு மக்கள் கோட்டபாய ராஜபக்சவை யும் மஹிந்த ராஜபக்சவை யும் நாட்டு மக்கள் விரட்டினார்கள் ஆனால் அவர்களை பாதுகாப்பதற்காக தற்பொழுது பரமாத்மா ஒருவர் வந்துள்ளார். அவர்தான் தற்போதுள்ள ரனில் விக்ரமசிங்க அவர்கள் நல்லாட்சி காலத்தில் நல்லவராக இருந்தார் இந்த ஆட்சியில் அவர் மோசமானவராக உருவெடுத்து இருக்கிறார்.

ஊழல் செய்துள்ள 134பேரையும் பாதுகாப்பதற்கு அந்த பரமாத்மா அங்கு சென்றுள்ளார் நாட்டில் யுத்தம் இடம்பெற்ற போது தமிழர்களை அடக்குமுறைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு சட்டம்தான் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் அந்த காலத்தில் சிங்களவர்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது இன்று அந்த சட்டம் மாறுபட்டு உள்ளது. இந்த பயங்கரவாத சட்டத்தின் ஊடாக ஒரு நபர் கைது செய்யப்பட்டால் ஒரு வாரம் அல்லது இரண்டு வருடங்களுக்கு தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த பயங்கரவாத தடை சட்டத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி முழுமையாக எதிர்க்கிறது இனிவரும் காலங்களில் அரசாங்கத்தையும் ரனில் விக்ரமசிங்கவை யும் எவரும் விமர்சிக்க முடியாது நாட்டுக்கு நல்ல சட்டங்கள் அமுல்படுத்தினால் அதனை நாம் வரவேற்போம் பாதிப்புக்கு உள்ளான சட்டங்கள் வந்தால் அதனை எதிர்து செயல்படுவோம் என குறிப்பிட்டார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி ஒருபோதும் ஆதரிக்காது

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் இனக்கபாடு எட்டாவிட்டால் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்று கூடி வீதிக்கு இறங்குவோம்.

நுவரெலியா மாவட்ட எம்.பி.பழனிதிகாம்பரம் தெரிவிப்பு.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஒருபோதும் ஆதரவு வழங்காது யென தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார் 02.04.2023. ஞாயிற்றுக்கிழமை அக்கரப்பத்தனை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த மக்கள் சந்திப்பில் பழனி திகாம்பரம் உட்பட மலையக

மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி



தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.உதயகுமார். முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள். முன்னால் பிரதேச சபை உறுப்பினர்கள். பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது குறித்த நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம். பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரித்து இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்து விட்டது இந்த அரசாங்கம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் நாட்டில் தற்பொழுது அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்துவருகிறது மக்கள் வாழ்வாதார பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் பேச்சுவார்த்தை நடத்தும் தொழிற்சங்கங்கள் பெருந்தோட்ட நிறுவனங்களோடு கலந்துரையாடி முறையான சம்பளத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் தற்போது உள்ள அரசாங்கத்தில் அமைச்சி பதவியை பொருப்பேற்று கொண்டு எந்த ஒரு அபிவிருத்தி திட்டத்தையும் முன்னெடுக்கமுடியாது ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த காலத்தில் மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது .

மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவன் நான் அமைச்சி பதவியை பொருப்பேற்றால் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் இல்லாவிட்டால் அமைச்சி பதவி தேவையில்லை மலையகத்தில் மாத்திரம் அல்ல நாட்டில் உள்ள படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேளை வாய்பு பிரச்சினை காணப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் சதிஜ் பிரேமதாச வின் அரசாங்கத்தில் அபிவிருத்தி திட்டங்கள் முதல் படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேளை வாய்ப்பையும் பெற்று கொடுப்பேன் அதேபோல் பெருந்தோட்ட தொழிலாளர்களை சிருதோட்ட உரிமையாளராக மாற்றி காட்டுவேன் என குறிப்பிட்டார்.

# மீனாட்சி அம்மன் ஆலயத்தில் யானைகள் அட்டகாசம்; பாரிய சேதம்!









( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பழை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கடந்த31ம் திகதி நள்ளிரவில் புகுந்த ஐந்து யானைகள் அங்கு பாரிய சேதத்தை விளைவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு 12 மணியளவில் சுமார் 5 யானைகள் ஆலய சுற்றுமதிலை உடைத்துக் கொண்டு அங்கிருந்த அலுவலக அறை களஞ்சியசாலை என்பவற்றை முற்றாக உடைத்து சேதப்படுத்தின.

களஞ்சிய சாலையில் உள்ளிருந்த அரிசியை எடுத்து உறிஞ்சியது. நான்கு பக்கங்களிலும் தும்பிக்கையால் உடைத்து சேதப்படுத்தின.

அருகில் இருந்த பாரிய மாமரத்தின் கிளையை முறித்து எறிந்து சுமார் ஒரு மணி நேரம் அட்டகாசம் செய்தன.

அச்சமயம் அங்கிருந்த காவலாளி எதுவும் செய்ய முடியாத நிலையில் அச்சத்தில் இருந்துள்ளதாக ஆலய தலைவர் கி. ஜெயசிறில் கூறினார் .

இது தொடர்பாக போலீசிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகக்கூறினார்.

# சந்திவெளி திகிலிவட்டை பாதை புனரமைப்பு ஜனநாயகப் போராளிகள் கட்சி நடவடிக்கை



(சுமன்)

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சந்திவெளி திகிலிவெட்டை கிராமத்துக்குச் செல்லும் பாதை நீண்ட காலமாக சேதமுற்று சீரமைக்கப்படாமல் மக்கள் பயணிப்பதற்கு அசௌகரியமான நிலையில் இருப்பதையிட்டு அதனைச் சீரமைப்பது தொடர்பிலான களவிஜமொன்று நேற்றைய தினம் ஜனநாயகப் போராளிகள் கட்சியினரால் மேற்கொள்ளப்பட்டது.

மக்களினால் சமூகவலை தளங்களில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக மேற்படி பதையை புனரமைப்பது தொடர்பில் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் இப்பாதயை மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் சீரமைப்பதற்கான விடயங்களை ஆராய்வதற்காக இன்றைய விஜயம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் உள்ளிட்ட குழுவினரே இக்கள விஜயத்தினை முன்னெடுத்திருந்ததுடன், பாதை ஓட்டுனர் மற்றும் பாதையில் பயணம் செய்யும் பொதுமக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

மேற்படி சந்திவெளி திகிலிவெட்டை பாதை தொடர்பில் மக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை அறிந்து எமது கட்சியின் புலம்பெயர் உறவுகள் மூலம் இதனை பகுதியளவிலாவது சீரமைத்து மக்களுக்கு நன்மை பயக்கும் விடயத்தினை மேற்கொள்ள இன்றைய தினம் எமது களவிஜமொன்றை மேற்கொண்டிருந்தோம். இதன்போது பாதை ஓட்டுனர் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடி பல விடயங்களை ஆராய்ந்தோம். நாம் இன்று விஜயம் மேற்கொண்டிருந்த போதும் கூட இப்பாதையில் பயணித்த ஒரு பெண் பாதை பழுதடைந்திருந்தமையால் அதில் வீழ்ந்த சம்பவமும் இடம்பெற்றிருந்தது. இவ்வாறு தினமும் மக்கள் ஏதோவொரு வகையில் பாதிப்பினை அடைந்து வருகின்றார்கள். எனவே இந்தப் பாதையின் புனரமைப்பு என்பது மிகவும் அத்தியாவசியமாக அமைகின்றது. அந்த வகையில் இப்பாதையின் முழுமையான புனரமைப்பிற்கு சுமார் 1.4 மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்ற நிலையில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினால் ஒரு பகுதியளவான புனரமைப்பிற்கு நிதி வழங்கப்படுவதற்கு உள்ள நிலையில் இதனைப் பூரணமாகப் புனரமைப்பதற்குரிய நிதியினை வழங்குவதற்கு உள்ளூர், புலம்பெயர் உறவுகள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா -௨0௨3

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் எதிர் வருகின்ற தமிழ் சித்திரைப்புத்தாண்டனை முன்னிட்டு சித்திரைப்புத்தாண்டு பாரம்பரிய கலாசார விளையாட்டு விழா நடத்துவதற்கான விசேட கலந்துரையாடல் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்(காணி) திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் ஆகிய இருவரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வை நடத்துவதற்காக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இராணுவம், பொலிஸ், மாநகர சபை, லயன்ஸ் கழகம், சமூக அமைப்புக்கள், கலாசார பிரிவு, ஊடகப்பிரிவு, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்பட்ட செயற்பாட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டது.



இதன்போது மரதன் ஓட்டம், மெல்ல சைக்கிலோட்டம், போத்தலில் நீர் நிரப்புதல், தேசிக்காய் சமநிலை, கோலம், ஊசிக்கு நூல் போடுதல், சாக்கோட்டம், யானைக்கு கண் வைத்தல், ஓலை பின்னுதல், தேங்காய்துருவுதல், கயிறு இழத்தல், தலையனைச்சமர், கிராமிய பாடல், மிட்டாய் ஓட்டம், சங்கீத கதிரை, வழுக்கு மரம், பலூன் ஊதி உடைத்தல் போன்ற போட்டிகளை உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் எதிர் வரும் மாதம் நடத்துவதாக தீர்மானித்துள்ளதுடன் பாரம்பரிய விளையாட்டுக்களான கிட்டியடித்தல், சுரக்காய் விளையாட்டு, கொத்திருக்கு கொத்து, தெத்திக்கோடு போன்ற விளையாட்டுக்களுடன், றபான் அடித்தல், பல்லாங்குழி, வட்டக்காவடி, கண்ணம் பூச்சி போன்ற விளையாட்டுக்களும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள உயரதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பல துறை சார் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.